# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

### பிரிவு 13 ( 2007ம், அதற்கு முன் பிறந்தவர்களும்)

**விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடைகளை எழுதுதுல்)**

1. தூய மாற்கு நற்செய்தியாளரின் அடையாளம் என்ன? சிங்கம்.
2. தூய லூக்கா நற்செய்தியாளரின் அடையாளம் என்ன? எருது.
3. தூய யோவான் நற்செய்தியாளரின் அடையாளம் என்ன? கழுகு.
4. இஸ்ராயேலரின் எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினரின் வகையைத் தருக?பெரிய இறைவாக்கினர், சிறிய இறைவாக்கினர்.
5. இஸ்ராயேலரின் பெரிய இறைவாக்கினர்கள் யாவர்? எசாயா, எரேமியா, எசேக்கியல்.
6. தாவீது அரசனுக்கு இறைவக்குரைத்த இறைவாக்கினர் யார்? நாத்தான் இறைவாக்கினர்.
7. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்கள் மூவரின் பெயர்களைத் தருக? நாத்தான், எலியா, எலிசா.
8. ஆபிரகாம் தமது வாழ்வில் முகம் கொடுத்த சவால்கள் 3 தருக? முதிர்ந்த வயதில் பேரினம் உருவாதல், நாடோடி வாழ்க்கை, அறியாத நாட்டிற்கு செல்ல வேண்டியிருத்தல்.
9. மறைமாவட்ட குருக்கள் எடுக்கும் 2 வார்ததைப்பாடுகளும் எவை? கீழ்ப்படிவு, மணத்துறவு.
10. துறவறத்தோர் செய்யும் வார்த்தைப்பாடுகள் எவை? கீழ்ப்படிவு, மணத்துறவு, ஏழ்மை.
11. அருட்பணியாளர் மட்டில் உமக்குள்ள கடமைகள் எவை? அவர்களுக்காக செபித்தல், திருவழிபாட்டுப் பணிகளில் உதவி புரிதல், திருஅவையின் பராமரிப்பிற்கான பத்தில் ஒருபங்கைச் செலுத்துதல்.
12. புறவினத்தவரான நற்செய்தியாளர் யார்? தூய லூக்கா.
13. தூய லூக்காவின் ஆற்றல்கள் எவை? மருத்துவர், ஓவியர், வரலாற்று ஆசிரியர்.
14. செபத்தின் நற்செய்தி, ஏழைகளின் நற்செய்தி எனப்படும் நற்செய்தியை எழுதியவர் யார்? லூக்கா.
15. தூய ஆவியின் நற்செய்தி எனப்படும் நற்செய்தி எது? தூய லூக்கா நற்செய்தி.
16. தூய லூக்கா நற்செய்தியில் காணப்படும் 3 பாடல்களும் எவை? மரியாவின் பாடல், செக்கரியாவின் பாடல், சிமியோனின் பாடல்.
17. திருமுழுக்கு யோவானின் பெற்றோர்? செக்கரியா, எலிசபெத்.
18. ஒட்டக முடியிலான ஆடையை அணிந்து, வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் உண்டு வந்தவர்? திருமுழுக்கு யோவான்.
19. திருவிவிலியத்தில் வரலாற்று நூல்களுக்குள் எத்தனை நூல்கள் உள்ளன? 16.
20. பழைய ஏற்பாட்டில் ஞான நூல்களின் எத்தனை நூல்கள் உள்ளன? 7.
21. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் நூல்கள் எத்தனை? 17.
22. பழைய ஏற்பாட்டில் வெளிப்பாட்டு இலக்கியத்தில் அடங்கும் நூல் எது? தானியேல்.
23. திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டு நூல்களை வகைப்படுத்துக?ஐந்நூல், வரலாற்று நூல்கள், ஞான நூலகள், இறைவாக்கினர் நூல்கள், வெளிபாட்டு இலக்கியம்.
24. திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டு நூல்களை வகைப்படுத்துக?நற்செய்தியும், திருத்தூதர் பணிகளும், திருமுகங்கள், திருவெளிபாட்டு இலக்கியம்.
25. திருமுகங்களை வகைப்படுத்துக? திருத்தூதர் பவுலின் திருமுகம், பொதுத் திருமுகங்கள்.
26. ஒத்தமை நற்செய்தியாளர்களை தருக? தூய மத்தேயு, தூய மாற்கு, தூய லூக்கா.

27. திருத்தூதர் யோவான் தனது நற்செய்தியை எழுதிய காலப்பகுதி எது? கி.பி. 90-100.
28. "நானே நல்ல ஆயன்" இதில் நல்ல ஆயனாகக் கருதப்படுபவர் யார்? இயேசு கிறிஸ்து.
29. ஐந்நூல்கள் எவை? தொடக்க நூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம்.
30. இறைவன் 06 நாட்களில் உலகைப் படைத்து 07ம் நாள் என்ன செய்தார்? ஓய்ந்திருந்தார்.
31. திருத்தூதர்கள் வழி வந்த திருஅவை எது? கத்தோலிக்கத் திருஅவை.
32. புதிய ஏற்பாட்டின் வரலாற்று நூல்கள் எவை? தூய மத்தேயு, தூய மாற்கு, தூய லூக்கா, தூய யோவான், திருத்தூதர் பணி நூல்.
33. நற்செய்தி நூல்கள் எவை? தூய மத்தேயு, தூய மாற்கு, தூய லூக்கா, தூய யோவான்.
34. திருத்தூதர் பணி நூலின் ஆசிரியர் யார்? தூய லூக்கா.
35. தூய லூக்கா எழுதிய நூல்கள் எத்தனை? அவை எவை? 2. தூய லூக்கா, திருத்தூதர் பணி நூல்.
36. 'தெயோபில்' என்பதன் அர்த்தம் என்ன? ஆண்டவரின் நண்பர்
37. தூய லூக்காவின் ஆற்றல்கள் எவை? வரலாற்று ஆசிரியர், மருத்துவம், ஓவியம் வரைதல்...
38. தூய லூக்கா யாருடைய பயணத் தோழராக இருந்தார்? தூய பவுலின்
39. தூய லூக்கா தூய பவுலுடன் எந்தெந்த மறைதூதுப் பயணங்களில் இணைந்து கொண்டார்? 2ம், 3ம் மறைதூதுப் பயணங்களில்
40. திருத்தூதர் பணி எங்கு எப்போது எழுதப்பட்டது?கிரேக்க தேசத்தின் அகாயா எனுமிடத்தில் கி.பி. 80-90ல்
41. திருத்தூதர்கள் முதன் முதலில் எங்கு நற்செய்தியை அறிவித்தனர்?எருசலேமில்.
42. எமது மீட்பின் அடையாளம் எது? திருச்சிலுவை.
43. பலி செலுத்த சாலமோன் அரசன் சென்ற மலை உச்சி எது? கிபயோன்.
44. சாலமோன் அரசனுக்கு ஆண்டவர் கனவில் தோன்றியது எங்கே? கிபயோன் மலையில்.
45. தனது கனவில் தோன்றிய ஆண்டவரிடம் சாலமோன் அரசன் கேட்டது என்ன? மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமையைப் பகுத்தறியவும் தேவையான ஞானத்தை கேட்டார்.
46. சாலமோன் அரசனுக்கு முன்னர் இஸ்ராயேலரை ஆண்ட அரசன் யார்? தாவீது அரசர்.
47. ஆண்டவரது பார்வையில் உண்மையுடனும் நீதியுடனும் நேரிய உள்ளத்துடனும் நடந்து கொண்ட அரசன் எனப் பெயர் பெற்ற இஸ்ரவேலரின் அரசன் யார்? தாவீது அரசர்.
48. ஞானத்தையும் பகுத்தறிவுள்ள உள்ளத்தையும் வரமாகப் பெற்றுக் கொண்ட அரசன் யார்? சாலமோன் அரசன்.
49. நன்மை தீமையைப் பகுத்தறிந்து நன்மையை வாழ்வில் கடைப்பிடித்து கடவுளுக்கு உகந்த நேரிய வாழ்க்கை வாழ்வதை எவ்வாறு அழைப்பர்? ஞானமுள்ள வாழ்வு.
50. தூய ஆவியின் கொடைகள் எத்தனை? அவை எவை? 7. ஞானம், பக்தி, அறிவு, திடம், புத்தி, விமரிசை, தேவபயம்.
51. இயேசு கைது செய்யப்பட்டது யாரால்? யூதர்களால்.
52. இயேசு கைது செய்யப்பட்டு எங்கு அழைத்துச் செல்லப்பட்டார்? தலைமைக் குருவின் வீட்டிற்கு.
53. இயேசு கைது செய்யப்பட்டு தலைமைக் குருவின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரைப் பின்தொடர்ந்த திருத்தூதர் யார்? பேதுரு.

54. பேதுரு இயேசுவை தெரியாது என்று கூறுவார் என இயேசு கூறிய விடயம் நிறைவேறியது எந்த இடத்தில்? தலைமைக் குருவின் வீட்டில்.
55. பேதுரு இயேசுவை தெரியாது என்று எத்தனை தடவைகள் மறுதலித்தார்? 3 முறை.
56. பேதுரு தன் தவறை உணர்ந்தது எப்போது? 3 முறை இயேசுவை தெரியாது என மறுதலித்து சேவல் கூவியபோது இயேசு பேதுருவை திரும்பிப்பார்த்த போது.
57. பேதுரு தன் தவறை உணர்ந்து என்ன செய்தார்? தலைமைக்குருவின் வீட்டிற்கு வெளியே சென்று மனம் நொந்து அழுதார்.
58. பேதுரு இயேசுவை தெரியாது என்று மறுதலித்த போது இயேசு என்ன செய்தார்? திரும்பி பேதுருவை கனிவோடு பார்த்தார்.
59. இயேசுவிடம் மூப்பர் சங்கத்தினர் வினவிய பிரதான வினா எதுவாக இருந்தது? 'நீ மெசியாதானா?'
60. மூப்பர் சங்கத்தினர் இயேசுவைப் பற்றி பிலாத்துவிடம் முன் வைத்த 3 குற்றச்சாட்டுக்களும் எவை? 'இவன் நம் மக்கள் சீரழியக் காரணமாயிருக்கிறான்', 'சீசருக்கு கப்பம் கட்டக் கூடாது என்கின்றான்', 'தானே மெசியாவாகிய அரசன் எனக் கூறுகின்றான்' என்பவையாகும்.
61. இயேசுவை விசாரித்த பிலாத்து இயேசுவிடம் கண்ட குற்றம் என்ன? குற்றம் ஒன்றுமில்லை.
62. இயேசுவின் காலத்தில் கலிலேயாவை ஆண்டு வந்த குறுநில மன்னன் யார்? ஏரோது அந்திபாஸ்.
63. பிலாத்துவினால் அனுப்பப்பட்ட இயேசுவிற்கு ஏரோது செய்தது என்ன? ஏளனம் செய்து பளபளப்பான ஆடை அணிவித்து மீண்டும் பிலாத்துவிடம் அனுப்பிவிட்டான்.
64. இயேசுவிற்கு பதிலாக விடுதலை செய்யப்பட்ட சிறைக் கைதி யார்? பரபாஸ்.
65. இயேசுவிற்கு சிலுவை மரணத் தீர்ப்பைத் தந்தது யார்? ஆளுநர் பிலாத்து.
66. இயேசு தனது சிலுவையை சுமந்து செல்ல உதவியவர் யார்? சீரேன் ஊர் சீமோன்.
67. இயேசுவை சிலுவையில் அறைந்த இடம் எது? மண்டையோடு எனுமிடத்தில்.
68. இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டவர்கள் யாவர்? இரு கள்வர்கள்.
69. சிலுவையில் தொங்கிய இயேசு தமக்கு தீங்கிழைத்தவர்களை மன்னித்த விதத்தை எழுதுக... 'தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்வது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை' எனச் செபித்து தமக்கு தீங்கிழைத்தவர்களை மன்னித்தார்.
70. இயேசு சிலுவையில் தொங்கிய போது அவருக்கெதிராக யூதர்களும் படைவீரரும் செய்த காரியங்கள் எவை? ஏளனம் செய்தமை, புளித்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தமை, இயேசுவின் ஆடைகளை தமக்குள் சீட்டுப் போட்டு பகிர்ந்து கொண்டமை,
71. சிலுவையில் தொங்கவிடப்பட்ட INRI என்பதன் அர்த்தம் என்ன? நசரேத்தூர் இயேசு யூதரின் அரசன்.
72. சிலுவையில் தொங்கிய கள்வரில் ஒருவர் இயேசுவை ஏளனம் செய்ய, மற்றய கள்வன் கூறியதற்கு இயேசுவின் பதில் என்ன? 'இன்றே நீ என்னுடன் பேரின்ப வீட்டில் இருப்பாய்'.
73. சிலுவையில் இயேசு கூறிய இறுதி வார்த்தைகள் எவை?

1) 'என் இறைவா, என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர்'
2) 'தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை.
3) 'நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்கு சொல்லுகிறேன்'
4) 'தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்'
5) 'அம்மா, இவரே உம் மகன், இவரே உம் தாய்'

6) ‘தாகமாயிருக்கிறது’
7) ‘எல்லாம் நிறைவேறிற்று’

74. சிலுவையில் இயேசு உயிர் விட்ட போது நடந்த விடயங்கள் எவை? கதிரவன் இருண்டது, நாடெங்கும் இருள் உண்டானது, தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது.
75. கடவுள் வாக்களித்திருந்த மீட்பு மனுக்குலத்திற்கு உரித்தானது எப்போது? இயேசுவின் சிலுவை மரணத்தின் போது
76. இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய முன்வந்தவர் யார்? அரிமத்தியா ஊர் யோசேப்பு.
77. இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய அரிமத்தியா ஊர் யோசேப்பு யாரிடம் அனுமதி பெற்றார்? பிலாத்துவிடம்.
78. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தது எப்போது? அடக்கம் செய்து மூன்றாம் நாள்.
79. இயேசுவை அடக்கம் செய்த கல்லறைக்கு முதன் முதலில் சென்றவர் யார்? மகதலா மரியா.
80. இயேசு தான் உயிருடன் இருப்பதை காட்டிய சந்தர்ப்பங்கள் 3 தருக.
    1) பாஸ்கா ஞாயிறன்று எம்மாவுஸ் சீடருக்கு காட்சி கொடுத்தல்,
    2) பாஸ்கா ஞாயிறன்று மாலையில் திருத்தூதருக்கு தோன்றி ‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக’ எனக் கூறி பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை கொடுத்தமை,
    3) திருத்தூதருக்கு காட்சி கொடுத்த போது தோமா அங்கிருக்கவில்லை, அதன்பின் 8 நாட்களுக்கு பின் மீண்டும் இயேசு காட்சி கொடுத்து தோமாவின் அவநம்பிக்கையை நீக்கியமையும் தோமா தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியமையும்.
81. அப்பம் பிட்கும் போது இயேசுவின் பிரசன்னத்தை கண்டுகொண்ட சீடர்கள் யார்? எம்மாவுஸ் சீடர்கள்.
82. பாஸ்கா ஞாயிறு மாலையில் இயேசு சீடர்களுக்கு தோன்றியபோது கூறியது என்ன? ‘உங்களுக்கு அமைதி உரித்தாகுக’, ‘தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்’.
83. தமது உயிர்ப்பின் பின்னர் இயேசு தமது சீடர்களிடம் ஒப்படைத்த அருளடையாளம் எது? ஒப்புரவு.
84. பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் யாரால் யாருக்கு ஒப்படைக்கப்பட்டது? இயேசுவால் திருத்தூதருக்கு.
85. உயிர்த்த இயேசு காட்சிகொடுத்த வேளை ஏனைய சீடர்களுடன் இல்லாமலிருந்த சீடர் யார்? தோமா.
86. பாஸ்கா விழாவைக் கொண்டாடுபவர்கள் யார்? யூதர்கள்.
87. யூத மதத்தினரின் பிரதான விழாக்கள் 2 தருக.. பாஸ்கா விழா, பெந்தகோஸ்து விழா.
88. பெந்தகோஸ்து என்பதன் அர்த்தம் என்ன?ஐம்பது.
89. இறைவனுக்கு நன்றி கூறும் திருவிழாவாக உள்ள யூதரின் திருவிழா எது? பெந்தகோஸ்து விழா.
90. பெந்தகோஸ்து விழாவில் யூதர்கள் நினைவுகூர்ந்த நிகழ்வுகள் எவை? சீனாய் மலை உச்சியில் பத்துக் கட்டளைகளை பெற்றுக்கொண்டது, தானிய அறுவடையின் முதல் பலனை ஒப்புக்கொடுத்தல்.
91. யூதர்கள் பத்துக் கட்டளைகளை பெற்றுக்கொண்டது எங்கே? சீனாய் மலையில்.
92. இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் விண்ணகமடைந்தார்? நாற்பதாவது நாள்.
93. இயேசு விண்ணகமடையும் முன் தமது சீடர்களுக்கு வாக்களித்தது என்ன? தூய ஆவியை அனுப்புவதாக.

94. பெந்தகோஸ்து தினத்தில் நடந்தது என்ன? திருத்தூதர்கள் செபித்துக் கொண்டிருக்க திடீரென கொடுங்காற்று வீசுவது போன்ற இரைச்சல் வானதின் உண்டாக, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது. நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மீதும் வந்து அமர்ந்ததைக் கண்டனர்.
95. தூய ஆவியானவர் சீடர்கள் மீது எவ்வாறு இறங்கினார்? நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் வடிவில்.
96. தூய ஆவியானவரின் வருகையை வெளிப்படுத்தும் அடையாளங்கள் எவை? நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள், புறா, காற்று...
97. தூய ஆவியானவரின் கொடைகளால் நிரப்பப்பட்ட திருத்தூதர்கள் என்ன செய்தனர்? வெவ்வேறு மொழிகளில் பேசத் தொடங்கினர், திடம் கொண்டவர்களாக இறைவார்த்தைக்குச் சான்று பகர்ந்தனர்.
98. திருத்தூதர்கள் திடம் கொண்டவர்களாய் மாறக் காரணம் என்ன? தூய ஆவியானவரின் கொடைகளால் நிரப்பப்பட்டதினால்.
99. எருசலேமில் தூய பேதுருவின் அருளுரையைக் கேட்டோர் ஆச்சரியமடையக் காரணம் என்ன?ஏனெனில் திருத்தூதர் அனைவரும் பாமரர், கலிலேயாவைச் சேர்ந்தவர்கள்.
100. பேதுரு பலஸ்தீனத்தின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்?கலிலேயாவைச் சேர்ந்தவர்.
101. பெந்தகோஸ்து நாளில் தூய பேதுரு தனது அருளுரையில் அச்சமின்றி கூறிய விடயம் என்ன? இயேசு கடவுளின் மகன், இஸ்ராயேல் மக்கள் அவரை சிலுவையில் அறைந்து கொன்றார்கள், ஆயினும் கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார், அவர் கடவுளின வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார்.
102. இயேசுவிற்கு சான்று பகர தயங்கும் கிறிஸ்தவர்களுக்கு பேதுருவின் எச்செயல் சவாலாக அமைகின்றது? துணிவுடன் இயேசுவிற்கு சாட்சி பகர்தல்.
103. தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளும் கிறிஸ்தவர் எதுவாக மாறுகின்றார்? இயேசுவின் படைவீரராக மாறுகின்றனர்.
104. பெந்தகோஸ்த தினத்தன்று பேதுருவின் அருளுரையைக் கேட்டு மனம் மாறியோர் எத்தனை பேர்? 3000 பேர்.
105. திருச்சபையின் பிறந்த நாள் எது? பெந்தகோஸ்து நாள்.
106. பேதுருவினால் திருமுழுக்கு பெற்ற புறவினத்தவர் யார்? இத்தாலியா எனப்பட்ட படைப்பிரிவின் நூற்றுவத் தலைவர் கொர்னலியுவும் அவரது குடும்பத்தினரும்.
107. தொடக்கத் திருஅவையின் பண்புகள் எவை? திருத்தூதர்களின் போதனைகளில் நிலைத்திருத்தல், நட்புறவு, அப்பம் பிட்குதல், இறைவேண்டல்.
108. தொடக்க திருஅவையில் எழுந்த பிரச்சினை என்ன? பத்தி பரிமாறும் பணி தொடர்பான பிரச்சினை.
109. பத்தி பரிமாறும் பணியில் ஏற்பட்ட பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காணப்பட்டது? பத்தி பரிமாறும் பணியில் உதவ திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது.
110. திருத்தொண்டர்கள் நியமனத்தில் எதிர்பார்க்கப்பட்ட பண்புகள் எவை? நற்சான்று பெற்றவர்கள். தூய ஆவி அருளும் வல்லமை பெற்றவர்கள், ஞானம் நிறைந்தவர்கள்.
111. திருத்தொண்டர்களுக்கு பொறுப்புக்கள் எவ்வாறு வழங்கப்பட்டது? அவர்களது தலை மீது திருத்தூதர்கள் கைவைத்து இறைவனிடம் செபித்து பணி ஒப்படைக்கப்பட்டது.
112. திரு அவையின் முதல் மறைசாட்சி யார்? ஸ்தேவான்.
113. தூய ஸ்தேவான் இயேசுவிற்கு எவ்வாறு சான்று பகன்றார்? தன்னுயிரையும் தியாகம் செய்து, மறைசாட்சியாக...
114. திருத்தூதர்களில் முதல் மறைசாட்சி யார்? திருத்தூதர் யாக்கோபு.
115. சந்தியாகு என அழைக்கப்படுபவர் யார்? திருத்தூதர் யாக்கோபு.

116. தூய யாக்கோபு எவ்வாறு மறைசாட்சியானார்? வாளால் வெட்டிச் சிரச்சேதம் செய்யப்பட்டு.
117. தூய யாக்கோபு எந்த அரசனுடைய காலத்தில் மறைசாட்சியானார்? ஏரோது அகிரிப்பா 1.
118. திருத்தூதர்கள் மறைசாட்சியாளராக தைரியமடைந்தது யாரால்? தூய ஆவியால்.
119. கிறிஸ்தவரான நீர் தூய ஆவியை எவ்வாறு (எவ்வருளடையாளத்தின் மூலம்) பெற்றுக்கொள்கின்றீர்? உறுதிப்பூசுதல்.
120. நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்க எமக்கு தைரியம் தருபவர் யார்? தூய ஆவியானவர்.
121. பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்த திருத்தூதர் யார்? தூய பவுல்.
122. தூய பவுல் பிறந்த நகர் எது? தர்சு.
123. தூய பவுல் யாரிடமிருந்து சட்டத்தைக் கற்றிருந்தார்? எருசலேமில் புகழ்பெற்ற திருச்சட்ட ஆசிரியர் கமாலியேலிடமிருந்து.
124. தூய பவுல் எதைப்பற்றிய அறிவுபடைத்தவராக இருந்தார்? யூத மதச் சட்டங்கள், ஒழுக்கங்கள்.
125. தூய பவுல் சவுலாக இருந்தபோது கிறிஸ்தவர்களை துன்புறுத்தக் காரணம் என்ன? யூத மதத்தின் மீது கொண்டிருந்த அதீத பற்று.
126. சவுல் யாருடைய மரணத்திற்கு உடந்தையாக இருந்தார்?தூய ஸ்தேவானுடைய மரணத்திற்கு.
127. தமஸ்கு நகர கிறிஸ்தவர்களை துன்புறுத்த சவுல் செய்தது என்ன?தலைமைக் குருவிடம் அனுமதிக் கடிதத்தை கேட்டு வாங்கிக் கொண்டார்.
128. சவுல் தலைமைக் குருவிடம் அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொண்டது ஏன்? கிறிஸ்தவர்களை துன்புறுத்த.
129. சவுல் தலைமைக் குருவிடம் அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொண்டு சென்றது எங்கே? ஏன்? தமஸ்கு நகருக்கு, தமஸ்கு நகர கிறிஸ்தவர்களை துன்புறுத்த.
130. தலைமைக் குருவிடம் அனுமதிக் கடிதங்களை பெற்றுக் கொண்டு தமஸ்குவை நெருங்கிய போது சவுலுக்கு என்ன நடந்தது? திடீரென வானத்தில் தோன்றிய ஒரு ஒளி அவரைச் சூழ்ந்து வீசியதும் அவர் தரையில் வீழ்ந்தார், அதன் பின் அவர் தனது பார்வையை இழந்தார்.
131. சவுலின் மனமாற்றத்திற்கு காரணம் என்ன? உயிர்த்த இயேசுவினால் ஆட்கொள்ளப்பட்டதினால்.
132. சவுல் யாரிடம் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார்? அனனியாவிடம்.
133. பிற இனத்தவரின் திருத்தூதர் எனப்படுபவர் யார்? தூய பவுல்.
134. திரு அவையைப் பரவச் செய்ய சின்ன ஆசியா, கிரேக்கம், உரோமை வரை பயணம் செய்த திருத்தூதர் யார்? தூய பவுல்.
135. தூய பவுல் தனது முதலாவது திருப்பயணத்தை எங்கிருந்து ஆரம்பித்தார்? சீரியா அந்தியோக்கியாவிலிருந்து.
136. தூய பவுல் தனது இரண்டாவது மறைதூதுப் பயணத்தை எங்கு ஆரம்பித்து எங்கு நிறைவு செய்தார்? சீரியா அந்தியோக்கியாவில் ஆரம்பித்து எருசலேமில் நிறைவு செய்தார்.
137. தூய பவுல் தனது மூன்றாவது மறைதூதுப் பயணத்தை எங்கு ஆரம்பித்து எங்கு நிறைவு செய்தார்? சீரியா அந்தியோக்கியாவில் ஆரம்பித்து எருசலேமில் முடித்தார்.
138. கி.பி. 53-57ல் தூய பவுல் தனது எத்தனையாவது பயணத்தை மேற்கொண்டிருந்தார்? 3வது பயணத்தை.
139. தூய பவுல் எங்கு வைத்து கைது செய்யப்பட்டார்? எருசலேம் தேவலாயத்தில்.

140. தூய பவுல் உரோமைக்கு கைதியாக கொண்டு செல்லப்படக் காரணம் என்ன? தூய பவுல் உரோமைப் பேரரசினால் தான் விசாரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டபடியினால். (உரோமைக் குடிமகன்)

141. தூய பவுல் வீட்டுக்காவலில் இருந்த போதும் என்ன செய்தார்? நற்செய்தியைக் கேட்டிராத உரோமைக் குடிமக்களுக்கு மறையைப் போதித்தார்.

142. தூய பவுல் எவ்வாறு கொலை செய்யப்பட்டார்? சிரம் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

143. தூய பவுல் யாரால் கொலை செய்யப்பட்டார்? உரோமையில் பேரரசன் நீரோவினால்.

144. தூய பவுல் இயேசுவிற்கு எவ்வாறு சாட்சி பகர்ந்தார்? தனது உயிரைத் தியாகம் செய்து.

145. மறைதூதுப் பயணங்களில் பவுல் எதிர்கொண்ட சவால்கள் எவை? சிறையிலிடப்படுதல், கல்லால் எறியப்பட்டு நகரத்திற்கு வெளியே இழுத்து போடப்படல், யூதர்களின் எதிர்ப்பிற்கு ஆளாதல்.

## பேச்சுப்போட்டிக்கான தலைப்பு

## ஜூபிலி ஆண்டும் அது கொடுக்கும் அழைப்பும்

**குறிப்பு : பேச்சுப் போட்டிக்குரிய தலைப்பை நீங்களே ஆயத்தப்படுத்தவேண்டும் 3-5 நிமிடங்களுக்குள் உங்கள் பேச்சு அமைய வேண்டும்.**

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

அம்மையப்பன் உந்தன் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உன் உறவே நிரந்தரம் -2
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் நான்
மாண்ட பின்பும் உன்னில் உயிர்ப்பது நிரந்தரம்
நிரந்தரம் -2 நீயே நிரந்தரம் (2)

தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எமக்கு நீயே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீயே நிரந்தரம்
நான் சாயும் போது காப்பது நீயே நிரந்தரம் -2
நிரந்தரம் -2 நீயே நிரந்தரம் (2)

செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது இல்லை நிரந்தரம்
நிலைவாழ்வு என்னும் நிஜமான நீயே நிரந்தரம் - அதன்
விலையாக எனை நீ உன்னில் இணைப்பாய் நிரந்தரம் -2
நிரந்தரம் -2 நீயே நிரந்தரம் (2)

## ஓவியப் போட்டிக்கான தலைப்பு

## சிலுவையடியில் அன்னை மரியா